சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. R. Jeya Raman*
*Dr. M. Pandi*
*Dr. Aranga. Pari*
*Dr. A. Ra. Sivakumaran*
*Dr. A. Syed Zakir Hasan*
*Dr. Kumar*
*Dr. S. Easwaran*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. G. Veeramani*
*Dr. K. Narmatha*
*Dr. S. Balasubramanian*
*Dr. K. Vasudevan*
*Dr. F. Selvakumaran*
*Dr. T. Vishnu Kumaran*
*Dr. S. Rajendran*
*Dr. B. Sathiyamoorthy*
*Dr. Govindaraj*
*Dr. Kumara Selva*
*Dr. Senthil Prakash*
*Dr. R. Kurinchiventhan*
*Dr. Sr. Jeusin Francis*
*Dr. R. Rajalakshmi*
*Dr. R. Malarvizhi Mangayarkarasi*
*Dr. P. Ibrahim*
*Dr. K. Sirajudeen*
*Dr. T. Jegathesan*
*Dr. Pon. Kathiresan*
*Dr. M.H. Jahanara Anbu Jaya*
*Mr. K. Saravanan*

07 மாசி 2050
19 February 2019

ISSN : 2321 - 984X

பல்கலைக் கழக மானியக் குழு அங்கீகாரம் பெற்றத் தமிழ்ப் பன்னாட்டு ஆய்விதழ்

UGC APPROVED INTERNATIONAL THAMIZH JOURNAL

UGC Journal No.40720

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)*
*(கலை & மனிதவியல்)*

# *Journal of* Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*
*(Arts & Humanities)*

சிறப்பிதழ் : தேசியக் கருத்தரங்கம்-2019
தமிழ்த்துறை
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)
பாளையங்கோட்டை-627 002, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா

## பொருநைப் பதிவுகளும் பன்முக எழுத்தாளுமைகளும்

சிறப்பிதழ் ஆசிரியர்கள்
**Special Issue Editors**

முனைவர் மி. கவிதா
உதவிப்பேராசிரியர்

முனைவர் ச. கந்தன்
உதவிப்பேராசிரியர்

முனைவர் சு. ரவிகேசுராஜ்
உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை, தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

**3** பகுதி-2 Part -2

# அண்ணாமலை ரெட்டியாரின் அருந்தமிழ்ப் படைப்பு

**சி. சூரியகுமார்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
இசைத் துறை, இராணி மேரி கல்லூரி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

முகவுரை.

தமிழின் பெருமை அளவிடற்கரியது அத்தமிழை இயல் தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்று வகைப்படுத்தி முத்தமிழையும் முச்சங்கம் அமைத்து வளர்த்தெடுத்த தமிழரை உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர்.

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே - வாளொடு
முன்தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி"

என்று கூறிப் பெருமைப்படுத்தியுள்ளார். உலகில் முதன்முதலில் தோன்றிய மக்கள் தமிழர்கள் என்பதும், முதன்முதலில் பேசிய மொழி தமிழ் என்பதையும் தற்கால மொழியியல் ஆராய்ச்சி வல்லுனரான அலெக்ஸ் கொரியர் போன்றோர் நிறுவியுள்ளனர். அந்த வகையில் உலகம் முழுமையும் ஆட்சி செய்த தமிழில் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல் கோடி பேரறிஞர்கள் தோன்றி முத்தமிழுக்கும் தொண்டாற்றி வந்துள்ளனர். அவ்வாறு தொண்டாற்றியவர்களின் படைப்புகள் இன்றளவும் நின்று நிலைப்பதற்கு அவற்றின் தனித்தன்மையே காரணமெனலாம். அவ்வாறான அருந்தமிழ்ப் படைப்புக்கள் தந்த அறிஞர் பெருமக்களில் "அண்ணாமலை ரெட்டியாரும்" குறிப்பிடத்தக்கவர். எனவே அவரின் வரலாறு, மற்றும் அவரின் படைப்புக்களைக் குறிப்பிட்டு அவற்றில் காவடிச்சிந்து எனும் படைப்பானது தமிழிசையில் பெற்றுள்ள சிறப்புகள் எவை என்று தெரியப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, இலக்கிய ஆய்வு, விவரண ஆய்வு முறைகளில் இவ்வாய்வு அமைகின்றது.

அண்ணாமலை ரெட்டியார்.

"சென்னிக்குள நகர் வாசன் - தமிழ்த்
தேருமண்ணாமலை தாசன்........."

என்ற இந்தப் பாடல் அண்ணாமலை ரெட்டியாரின் சிறப்பான காவடிச் சிந்துப் பாடல்களில் ஒன்று. இதிலிருந்து சென்னிக்குளம் என்னும் ஊரில் பிறந்தவர் என்பது தெரியவருகின்றது. இவ்வூரானது தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள புகழ் பெற்ற சங்கரநயினார் கோவில் ஊரை அடுத்து அமைந்துள்ளது. அவ்வூரில் 1865 ஆம் ஆண்டு பிறந்த அண்ணாமலை ரெட்டியார் திருநெல்வேலி இராமசாமி கவிராயரிடம் கல்வி கற்று பின்னர் ஊற்று மலை ஜமீந்தார் சுந்தரதாஸ் பாண்டியனின் சமஸ்தான வித்துவானாக விளங்கினார். அத்துடன் ஊற்று மலை ஜமீந்தார் இருதயாலய மருதப்ப தேவர் அண்ணாமலை ரெட்டியாரின் பாடல்கள் மேல் விருப்புக் கொண்டு அவரை ஆதரித்துள்ளார். காவடிச்சிந்து மூலம் தமிழிசைக்குப் பெரும் தொண்டாற்றிய இவர் நோய் காரணமாக 1891 ஆம் ஆண்டு தம் 26வது வயதிலே காலமானார்.

படைப்புக்கள்.

அண்ணாமலை ரெட்டியார் மிகுந்த தமிழ்ப் புலமை உடையவர். இவர் நினைத்த உடனேயே எந்தப் பொருளைப் பற்றியும் பாடும் வல்லமை பெற்றவராதலால் சிறப்பான படைப்புக்கள் பலவற்றினை அருளியுள்ளார். கவிதை இயற்றுவதிலும், சாதுரியமாகச் சிலேடையை பயன்படுத்துவதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவரின் படைப்புக்களாகக் காவடிச்சிந்து, கோமதி அந்தாதி, வீரை தலபுராணம் மற்றும் வீரை நவநீத

கிருஷ்ணசாமி பதிகம் போற்றவற்றினைக் குறிப்பிடலாம். தமிழில் மிகவும் சிக்கலான பாடல் அமைப்பினையும், சந்த அமைப்பினையும் பாடிப் புகழ் பெற்றவார் இவரெனலாம். இவரின் படைப்புக்களில் காவடிச்சிந்து மிகவும் பிரபலமானது இவ்விலக்கிய மரபினைத் தோற்றுவித்தவர் இவர் எனபதாலேயே காவடிச்சிந்தின் தந்தை என அண்ணாமலை ரெட்டியார் போற்றப்படுகின்றார். இவரின் பாடல்கள் அக்காலம் முதல் இக்காலம் வரை இசை அரங்குகளிலும், நாட்டிய அரங்குகளிலும் மற்றும் நாட்டிய நாடக அரங்குகளிலும் இடம் பெறுகின்றன.

**காவடிச் சிந்து.**

தமிழக நாட்டுப் புறப் பாடல்களில் சிறப்பான இடம் வகிப்பவை சிந்துப்பாடல்களாகும். அவற்றை வழி நடைச் சிந்து, வளையற்சிந்து, நொண்டிச்சிந்து, காவடிச் சிந்து என்று வகைப்படுத்தினர். பிற்காலத்தில் இவை கள்ளுக்கடைசிந்து, குள்ளத்தாராச் சிந்து, கொலைச்சிந்து என்றெல்லாம் மேலும் விரிவடைந்தன. தமிழில் சிந்துப் பாடல்கள் எல்லாவற்றிற்கும் அரசியாக விளங்குவது காவடிச் சிந்தேயாகும்.

தமிழ்நாடு என்று சொன்னதும் நம் நினைவில் உடன் தோன்றுவன தமிழ் முருகப்பெருமானும், அவன் புகழ் பாடும் ஆறுபடை வீடுகளும் என்பதில் மறுப்பில்லை. முருகன் என்றாலே உடன் நினைவில் வருவது அவன் தமிழ்க்கடவுள் என்பதும், அவனடியார்கள் அவனை நினைந்துருகி எடுக்கும் காவடிகளும் தான். அது பால் காவடி, பன்னீர்க் காவடி, பறவைக் காவடி, புஷ்பக் காவடி, மச்சக் காவடி என காவடிகளின் பட்டியல் நீளும். தமிழக நாட்டுப் புற ஆட்டங்களில் காவடியாட்டம் தனிச்சிறப்புப் பெறும். இந்த ஆட்டம் மக்களின் கலையுணர்வும், பக்தியுணர்வும் கலந்து குழைந்து வெளிப்படும் ஆட்டமாகும். எனவே இந்த ஆட்டத்திற்கான இசையிலும், பக்தியுணர்வும், கலையுணர்வும் இரண்டறக் கலந்து விளங்குவதில் காவடிச்சிந்து சிறப்பிடம் பெறுகின்றது.

அண்ணாமலை ரெட்டியார் தம் காவடிச்சிந்துப் பாடல்களில் பொருள் வளம், மொழி வளம், ஓசை நயம் ஆகியவற்றை இணைத்தும் மிடுக்கான தாளக் கட்டுக்களைத் தரும் முடுகுகளையும், சந்தங்களையும் இணைத்தும் நம் காதுகளில் எல்லாம் தேனாக இனிக்கச் செய்தவர். மேலும் இவர் தம் பெயரையே முத்திரையாக வைத்து காவடிச்சிந்துப் பாடல்களைச் செய்துள்ளார்.

**காவடிச் சிந்தின் தோற்றம்.**

அண்ணாமலை ரெட்டியாரை ஆதரித்த ஊற்று மலை ஜமீன்தார் இருதயாலய மருதப்ப தேவர் கழுகு மலை முருகன் கோயிலுக்குக் காவடி எடுத்து ஊற்று மலையிலிருந்து கழுகு மலை வரை நடந்து சென்றார். அவருடன் அண்ணாமலையாரும் வேறு சிலரும் உடன் சென்றனர். வழி நடைக் களைப்பு தோன்றா வகையில் இசையினிமையுடன் கூடிய காவடிச்சிந்து பாடலை அண்ணாமலை செட்டியார் பாடிக்கொண்டே வந்தார்.

**“பொன்னுலவு சென்னி குள**
**நன்னகர் அண்ணாமலை தனி ......”**

வழிச் செல்வோர் முருகா! முருகா! என்று கூறிக் கொண்டே சென்றனர். இந்தப் பயணம் தமிழிசை உலகிற்கு அருமையான சந்த மெட்டுடைய காவடிச்சிந்தைத் தந்தது. ரெட்டியாரின் காவடிச்சிந்தைப் பின்பற்றி பிற்கால கவிஞர்கள் பலரும் காவடிச்சிந்துகளைப் பாடியுள்ளனர். சான்றாக எட்டயபுர அரண்மனையில் பாரதி இருந்த பொழுது காவடிச்சிந்து பாட முடியுமா? என்று புலவர்கள் கேட்க பாரதியும் காவடிச்சிந்து மெட்டில்,

**“பச்சை திருமயில் வீரன் அலங்காரன்**
**கவுமாரன் - ஒளிர்**
**பன்னிரு திண் புய பாரன்........”**

பாடல் ஒன்றைப் பாடியுள்ளார்.பாரதி பாடல்களில் ‘எங்கள் தாய்’ என்ற தலைப்பில் அமைந்த ‘தொன்று

நிகழ்ந்ததனித்தும்" என்னும் பாடல் அண்ணாமலை ரெட்டியாரின் "ஆறுமுக வடிவேலவனே" என்ற காவடிச்சிந்து மெட்டைப் பின்பற்றிப் பாடப்பட்டதாகும். மாகாளியின் புகழைப் பாடும் "காலமாம் வனத்திலண்ட" என்ற பாடலில் அண்ணாமலையாரின் "பாலை வாய்க்கமுகில் வந்தூர்" என்ற காவடிச்சிந்தின் மெட்டில் அமைந்த பாடலாகும். "தேடியுனைச் சரணடைந்தேன்" என்ற முத்துமாரியம்மன் பாடலைக் காவடிச்சிந்து மெட்டில் பாடி வருகின்றனர்.

**காவடிச்சிந்தின் சிறப்புகள்.**

அண்ணாமலை ரெட்டியாருக்கு முன் காவடிச்சிந்து என்ற யாப்பு வடிவம் இல்லையென்றாலும் முருகனைக் குறித்துப் பாடிய இசைப் பாட்டுக்கள் இருந்தன. கந்தன் பாட்டு என்று அடியார்க்கு நல்லார் குறிப்பது முருகனைக் குறித்துப் பாடிய இசைப்பாட்டாக இருக்கலாம். முருக பக்தர்கள் கி.பி 18, 19 நூற்றாண்டுகளில் பாடி வந்த சிந்துப் பாடல்களில் ஈடுபாடு கொண்டு அண்ணாமலை ரெட்டியார் அந்த சிந்து மெட்டுக்களை செம்மைப்படுத்திக் காவடிச்சிந்தை உருவாக்கி இருக்கலாம். அருணகிரிநாதர் முதல் இராமலிங்க சுவாமிகள் வரை உள்ள பெரியார்களின் பாடல்களிலிருந்து அண்ணாமலை ரெட்டியார் சில பாடல்களையும் நாயகன் நாயகி பாவத்தில் அமைந்த அகத்துறைப் பாடல்கள் சிலவற்றையும் கொண்டதாய் அமைந்தது இந்நூல்.

சமயங்கள் கடந்த நிலையில் மக்களைக் காவடிச்சிந்து மக்களைக் கவர்ந்தது என்பதற்குச் சான்றாக,காதர் பாட்ஷா என்ற இசுலாமிய இசைக்கலைஞர் கழுகு மலை முருகன் மீது அதிக ஈடுபாடு உடையவர். அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச்சிந்து காதர் பாட்ஷாவைக் காவடிச்சிந்து பாடும் பாட்ஷாவாக மாற்றி முருகனைப் பற்றிப் பல பாடல்கள் பாடும் முருகப் பக்தராக்கியது. ஒரு வழக்கில் அகப்பட்டுக் கொண்ட காதர் பாட்ஷாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனை நிறைவேற்றும் காலத்தில். "உனது கடைசி விருப்பம் என்ன" என்று அதிகாரி கேட்டார். நான் ஒரு முருகப் பக்தன் எனது ஆர்மோனியத்தில் சிறிது நேரம் பாட வேண்டும் என்ற அவருக்குக் கடைசி விருப்பம் நிறைவேற்ற அனுமதிக்கப்பட்டது. ஆர்மோனியத்துடன்,

"சுருளி மலை மீதில் மேவும் சீலா
உனைத்தேடித் திரிந்தேன்....."

என்ற பாடலைப் பாட ஆரம்பித்ததும் இவரது காவடிச் சிந்து இசையில் அதிகாரிகள் தம்மை மறந்தனர். நெடுநேரம் பாடியதால் தூக்கிலிடும் நேரம் தாண்டி விட்டது. உடனிருந்த வழக்கறிஞர் இவரைத் தூக்கிடும் நேரம் முடிந்து விட்டது. சட்டப்படி இனி இவரைத் தூக்கிலிட முடியாது என்று வாதிட்டார் அதனால் காதர் பாட்ஷா விடுதலையானார் என்பது வரலாறு இதிலிருந்து காவடிச்சிந்தின் மேன்மையை உணர முடிகின்றது.

**காவடிச்சிந்தின் அமைப்பு.**

அண்ணாமலை ரெட்டியார் பாடிய காவடிச்சிந்தில் 22 இசைப் பாடல்கள் உள்ளன. விநாயகர் துதி, முருகன் துதி, முதற் கொண்டு கழுகு மலை, நகர் வளம், கோயில் வளம், மலை வளம், வாவி வளம், நற்றாய் இரங்கல், தலைவியின் ஊடல், தூது போன்ற பல தலைப்புகளில் பாடல்கள் அமைந்துள்ளன.

இதில் பல்லவி, அனுபல்லவி, சரணம், என்ற வளங்கள் கிடையாது. பாடல்கள் 4 முதல் 10 பகுதிகளை கொண்டமையும். சிந்து இலக்கணத்திற்கு ஏற்ப சில பாடல்கள் 3 அடிகளையும், சில பாடல்கள் விருத்தப்பா இலக்கணத்தையும் கொண்டமையப் பெற்றுள்ளன. மூன்று அடிகள் கொண்டு 1. மரகத விகசித, 2.கண்ணாயிரம் படைத்த,3.பாளைவாய் கமுவில் வந்தூர் ஆகிய பாடல்கள் உள்ளன. மேலும் சில பாடல்கள் நீண்ட வரிகள் உடைய பக்தியுடன் காணப்படுகின்றன. சான்றாக,1.மரகத விகசித. 2.பொன்னுலவு, 3.மஞ்சு நிகர் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். காவடி எடுத்து கொண்டு

ஆடுவதற்குரிய காவடிச்சிந்துப் பாடல்களில் துள்ளல் ஓசையின் நடையும், வரி ஈற்றின் இயல்புகளும் ததும்பும். இதன் உருவங்கள், முதலிரு வரிகள் வரை நடைப் பாட்டாகவும் இறுதி அடிகள் முடுகு இயல்பு பூண்ட வரிகளாகவும் விளங்கும் வரிகளில் எதுகைகள் ததும்பும்.

**இசையமைதி**

காவடிச்சிந்தின் இசையமைப்பைக் கவனித்தால் அது நாட்டுப்பாடல் இசை வகையை சார்ந்தது என்பது எளிதில் புலனாகும். சில இது தான் இராகம் என்று அறுதியிட்டுக் கூற முடியாதபடி உள்ளன. பெரும்பாலானவற்றில் ஹரிகாம்போதி, கரகரப்பிரியா, நடபைரவி ஆகியவற்றின் சுரங்களே பயில்கின்றன. புள்ளிக்கலாபமயில் போன்றவைகளின் இசை மிகவும் பழகிப் போய் காவடிச்சிந்து மெட்டு என்றே வழங்கலாயின. சில ஆனந்தபைரவி, முகாரி, செஞ்சுருட்டி, ஆகிய இராகங்களில் அமைந்துள்ளன. அவற்றிலும் நாட்டுப்பாடல் இசையின் சாயை படர்ந்திருக்கும். அண்ணாமலை ரெட்டியாரே வண்ணப் பைரவி தோடி ராகம் பாடி என்றும், மோகன முகாரி ராகம் பாடுமே என்றும் பாடியிருக்கின்றார். பழைய அச்சுப் புத்தகங்களில் நாட்டை, கன்னட, சாவேரி போன்ற இராகங்களில் காவடிச்சிந்துகள் காணப்படுகின்ற போதிலும் இவை நடைமுறையில் காணமுடியவில்லை.

**தாளம்.**

காவடிச்சிந்து பாடப்பெறும் போது காவடியாட்டமும் நிகழுகையால் இவற்றில் தாளச்சிறப்பு மிகுதியாக உண்டு. சதுஸ்ரம், மிஸ்ரம், திஸ்ரம், கண்டம் ஆகிய நடைகள் சர்வ சாதாரணமாக வழங்குகின்றன. செந்தின் மாநகர் என்று தொடங்கும் பாடலில் அதீத எடுப்பு அமைந்திருப்பதைக் காணலாம். பெரும் பாலானவற்றில் முடுகு மிகவும் சுவையாக இருக்கும். அந்தந்த நடைக்குத் தகுந்தபடி முடுகின் நடை அமைந்திருப்பது உணர்ந்து இன்புறத்தக்கது. கண்ணாயிரம் என்று தொடங்கும் பாடலின் காலப்பிரமாணம் வியத்திற்குரியது. காவடி எடுத்து ஆடுவோர் கால் பெயர்த்து வைத்தலைக் காண்பது போன்ற உணர்ச்சி கேட்போர் உள்ளத்தில் எழும்.

**முடிவுரை.**

கேட்டவுடன் எவரையும் கவரச்செய்யும் இசைச்சுவையுடன் சொற்சுவை, பொருட்சுவை நிறைந்த காவடிச்சிந்துப் பாடல்களைச் சென்ற தலை முறையில் இருந்த பெரும் இசைப்புலவர்கள் பலரும் இதனைக் கற்றுணர்ந்து போற்றி வந்திருக்கிறார்கள். அவ்வாறே தற்கால சந்ததியினரும் காவடிச்சிந்துகளைக் கற்பதனாலும், பாடுவதாலும் அவற்றின் சிறப்புகளைப் புரிந்து தமிழிசையில் மேன்மை கொள்ளலாம்.

**துணை நூல்கள்.**

1. அருணாசலம். மு - தமிழ் இசை இலக்கிய வரலாறு - கடவு பதிப்பகம் - மதுரை. - 2009.
2. பக்கிரிசாமிப் பாரதி. கே.ஏ-இந்திய இசைக்கருவூலம் - குசேலர் பதிப்பகம் - 2009.
3. ராமநாதன். S - காவடிச்சிந்து
4. தண்டபாணி.ப - திராவிடர் இசை - ஆபிரகாம் பண்டிதர் மன்றம் - 2001.
5. செல்லத்துரை பி.டி- தென்னக இசையியல் - வைகறைப்பதிப்பகம் - சென்னை 600108.
6. தமிழிசை கலைக்களஞ்சியம்- தொகுதி 2